Australian Government

COVID-19 VACCINATION

# ஆஸ்திரேலியாவிலுள்ள சர்வதேச மாணவ-மாணவியர்கள் கோவிட்-19 தடுப்பூசி மருந்துகளைப் பெற்றுக்கொள்ளலாம்

ஆஸ்திரேலியாவிலுள்ள அனைவருக்கும் கோவிட்-19 தடுப்பூசி மருந்துகள் அவரவர் விருப்பத்திற்குரியவை என்பதுடன் இலவசமானவையுமாகும். ஆஸ்திரேலியாவில் படிக்கும் 12 மற்றும் அதற்கு மேற்பட்ட வயதுடைய சர்வதேச மாணவ-மாணவியர்கள் கோவிட்-19 தடுப்பூசி மருந்துகளைப் பெற்றுக்கொள்ளலாம். அரசாங்க தடுப்பூசி மருந்தளிப்பு நிலையத்தில் உங்கள் தடுப்பூசி மருந்துகளைப் பெற்றுக்கொள்ள உங்களுக்கு ஒரு 'மெடிகெயர்' அட்டை தேவையில்லை.

தடுப்பூசி மருந்து மிகவும் நன்றாகச் செயற்பட, ஒரே தடுப்பூசி மருந்தின் இரண்டு அளவுகளை (two doses) நீங்கள் பெற்றுக்கொள்ள வேண்டியிருக்கும். நீங்கள் மிகவும் நோய்வாய்ப்படுவதிலிருந்து உங்களைப் பாதுகாக்க கோவிட்-19 தடுப்பூசி மருந்துகள் உதவுகின்றன.

தடுப்பூசி மருந்தக (கிளினிக்) கண்டுபிடிப்பி -ஐப் பாவித்து ஒரு மருந்தகத்தைக் கண்டறியவும், அத்துடன் கோவிட்-19 தடுப்பூசிக்காகப் பதிவுசெய்யவும் **covid-vaccine.healthdirect.gov.au** ஐப் பாருங்கள்.

மேலதிக தகவல்களுக்காக, **health.gov.au/covid19-vaccines-languages** க்குப் போகவும் அல்லது **1800 020 080** ஐ அழைக்கவும்.

உரைபெயர்ப்பு சேவைகளுக்கு **131 450**-ஐ அழையுங்கள் Interpreter





